கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
வடக்கு மாகாண சபை, උතුරු පළාත් සභාව, Northern Provincial Council
செம்மனி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna
Website: www.edumin.np.gov.lk e-mail: npplame@yahoo.com, npmoeplan@gmail.com

மாகாணக் கல்வி அமைச்சு சுற்றறிக்கை இல:- **02/2021** திகதி:- 25.12.2021

மாகாணக் கல்விப் பணிப்பாளர்.
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்.
பணிப்பாளர், விளையாட்டுத் திணைக்களம்.
உதவிப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் பிரிவு.
வடக்கு மாகாணம்.

**சுயவிபரக்கோவை மற்றும் வரலாற்றுத்தாள் பேணுவது பற்றிய அறிவுறுத்தல்.**

மேற்படி விடயம் தொடர்பில் தாபன விதிக்கோவை தொகுதி I அத்தியாயம் VI உப பிரிவு 2,4 மற்றும் 5 இன் பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமான பதவியொன்றிற்கு நியமிக்கப்படும் அலுவலர் ஒருவரது வரலாற்றுத்தாள் பொது 53 (அ) படிவத்தில் பேணப்படல் வேண்டும். வரலாற்றுத்தாள் பேணுவது தொடர்பில் குறித்த அலுவலரின் அடிப்படைத் தரவுகள் மற்றும் தாபன நடவடிக்கைகளின் பதிவுகளும் உரிய மூலக் கட்டளைகளுடன் சரிபார்க்கப்பட்டு பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால் முதலெழுத்தொப்பம் இடப்படல் வேண்டும். பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் மூன்று மாதத்திற்கு ஒருமுறையேனும் வரலாற்றத்தாள்களை பரிசீலித்து தாபன வேலைகள் (Establishment matters) யாவும் அத்திகதி வரை நடைபெற்றிருக்கின்றனவா எனவும் சரிபார்த்துக்கொள்ள வேண்டும்.

03. ஒவ்வொரு அலுவலரினதும் சயவிபரக்கோவைகள் உத்தியோகத்தரின் நியமன அதிகாரியின் அலுவலகத்திலும் உத்தியோகத்தர் ஒருவரை பணிக்கமர்த்தும் அதிகாரியின் அலுவலகத்திலும் பேணப்படல் வேண்டும். சுயவிபரக்கோவை பேணப்படுதலானது பதவிநிலை அலுவலர் ஒருவரின் கண்காணிப்பில் நடைபெறுவதனை அந்தந்தத் திணைக்கள / நிறுவனத் தலைவர்கள் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். இக்கோவையில் தாபன நடவடிக்கைகளுக்குரிய ஆவணங்கள் ஒவ்வொன்றும் காலவரண் அடிப்படையில் (Choronological order) இடப்படுவதனை உறுதி செய்தல் வேண்டும்.

04. மேலும் ஏதேனும் குற்றச்சாட்டு ஒன்றிற்கு உத்தியோகத்தர் ஆளாக்கப்பட்டாலேயொழிய ஒழுக்காற்று விடயமொன்று சம்பந்தமான கடிதங்கள் எவையும் சுயவிபரக்கோவையில் இடப்படல் ஆகாது. அவ்வாறு அவர் குற்றவாளியாகக் காணப்பட்டால், குற்றச்சாட்டுப் பத்திரத்தின் பிரதி ஒன்றும் ஒழுக்காற்று கட்டளையின் பிரதி ஒன்றும் அதில் கோப்பிடப்பட்டு வைக்கப்படல் வேண்டும்.

05. தங்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் எமக்கு வருடாந்தம் ஆண்டிறுதியில் அறிக்கையிடப்படல் வேண்டும்.

இவ் விடயம் தொடர்பில் தங்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.

இ. இளங்கோவன்
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள், விளை... ...
மற்றும் இளைஞர் வி...கார அமைச்சு
வ. மாகாணம்

இ.இளங்கோவன்
செயலாளர்.

செயலாளர் / ලේකම් / Secretary 021-2219259
அலுவலகம் / කාර්යාලය / Office 021-223 1343 (Gen.) 021-222 9673 (Senior Asst. Sec.) 021-222 2283 (Chief. Acct.) 021-222 2237 (Dir. Plan.) 021-222 0037 (DDE) 021-222 2219 (DSW) 021-222 0039 (A.O.)
தொலைநகலி / ෆැක්ස් / Fax 021 - 222 0794 (Gen) 021 - 222 2239 (Plan) 021 - 222 2293 (Acct)